**கவனிக்க -** 06.02.2026 ஆந் திகதிய 2479 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.
இவ்வார வர்த்தமானியின் பகுதி VI இன் 2026 ஆம் ஆண்டின் கொழும்பு மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்பலாம்.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2480 - 2026 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2026.03.13**
2480 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 02 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 06 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 07 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, மாச்சு மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B82773 - 5403 (2026/03)

# பதவிகள் - வெற்றிடம்

## கண்டி மாநகர சபையின் காணித் திணைக்களத்திற்காக சேவை கொள்வனவு செய்தல் முறையின்அடிப்படையில் நில அளவையாளர் சேவையினைப் பெற்றுக்கொள்ளல்

கண்டி மாநகர சபையின் சேவைத் தேவைப்பாட்டுக்கு அமைய சேவையினைக் கொள்வனவு செய்தல் அடிப்படையில் நில அளவையாளர் சேவையினைப் புரிவதற்கான உரிய தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் படி விண்ணப்பம் இடப்படுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சேவையின் பெயர் குறிப்பிடப்பட்டு 2026.03.27 ஆம் திகதிக்கு முன்னர் நகர ஆணையாளர், கண்டி மாநகர சபை, கண்டி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

1. கொள்வனவு செய்யவுள்ள சேவை : கண்டி மாநகர சபையின் நில அளவையாளர் செயற்பாடுகளை மேற்கொள் வதற்காக சேவை கொள்வனவு அடிப்படையில் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் சேவையைப் பெற்றுக் கொள்ளல்

2. மாதாந்தகொடுப்பனவு : மாதாந்த கொடுப்பனவு 92,238.00 ஆகும் (21 நாட்கள் பணியாற்ற வேண்டும்.)

3. உடலியல் தகைமைகள் : குறித்த சேவையை நிறைவேற்றுவதற்கான உரிய உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல்.

4. கல்வித்தகைமைகள் :

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணையகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் / நிறுவனம் ஒன்றில்

I. நில அளவை தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் ஒன்று அல்லது
II. விஞ்ஞானமானி விசேட பட்டம் ஒன்றை (கணிதம் அல்லது பௌதீக விஞ்ஞானம் அல்லது கணினி/தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமாக) அல்லது
III. பொறியியல் விஞ்ஞானமானி பட்டம் அல்லது
IV. வகுப்பு சித்தியுடன் கூடிய கணினி / தகவல் தொழில்நுட்பம் விஞ்ஞானமானி பட்டம் அல்லது
V. வகுப்பு சித்தியுடன் கூடிய விஞ்ஞானம் அல்லது பௌதீக விஞ்ஞான பாடம் உள்ளடங்கிய சாதாரண விஞ்ஞானமானிப் பட்டம் பெற்றிருத்தல்

மற்றும்

ஆ) க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

5. தொழில் தகைமைகள் : இலங்கை நில அளவையாளர் சேவைக்குப் புறம்பாக நில அளவையாளர் திணைக்களத்தில் பயிலுனர் பதவியில் சேவையாற்றுகின்ற 2002 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க அளவைச் சபையில் பதிவு செய்த நில அளவையாளர் கீழ்வரும் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

I. நில அளவையாளர் பட்டத்துடன் பயிலுனராக இணைக்கப்பட்ட அதிகாரியாயின் ஆறு (06) மாதங்கள் திணைக்கள நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சியுடன் நில அளவையாளர் திணைக்களத்தின் பயிலுனர் நில அளவையாளராக ஆகக் குறைந்தது 3 வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமாக சேவையாற்றியருக்க வேண்டும்.

II. நில அளவை அல்லாத வேறு பட்டம் உள்ள பயிலுனராக இணைக்கப்பட்ட அதிகாரியாயின் நில அளவை அளவையாளர் திணைக்களத்தின் பயிலுனர் நில அளவையாளராக ஆகக் குறைந்தது 3 வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமாக சேவையாற்றியருக்க வேண்டும்.

6. வேறுதகைமைகள் :

i. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல்

ii. விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு தகைமைகளை அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

7. வயது : அனத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பம் ஏற்கப்படும் திகதிதிக்கு18 வயதுக்கு குறையாமலும் 62 வயதிலும் அதிகரிக்காமலும் இருக்கவேண்டும்.

8. தெரிவு செய்யப்படுகின்ற முறை : தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதார்கள் கீழ்வரும் விதிமுறைகளுக்கு அமைய சேவைக்குத் தெரிவு செய்யப்படுவர்.

I. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீசையில் பெறுகின்ற புள்ளிகளுக்கு அமைய முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படவுள்ள பதவிகளின் தொகை 01 ஆகும்.

II. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீசையில் பெறுகின்ற புள்ளிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரரர் சேவை பெறுவதற்காகத் தெரிவு செய்யப்படுவார்.

9. சேவை நிபந்தனைகள் :

- சேவை பெறுவதற்கான காலம் என்பது சேவையில் இணைத்துக்கொள்ளும் தினத்திலிருந்து ஒரு வருடமாகும். தேவை அடிப்படையில் சேவைக் காலத்தினை நீடிப்பதற்கு நகர ஆணையாளரால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.
- எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சேவையினை முடிவுக்குக் கொண்டுவரும் அதிகாரம் மாநகர ஆணையாளருக்கு உண்டு
- ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் பணியில் இருந்து நீங்கிக்கொள்ள வேண்டும் என்றால் ஒரு மாதத்திற்கு முன் அறிவித்தல் தரல் வேண்டும்.
- இந்த சேவையைப் பெறுவது சேவைத் தேவைப்பாடு காரணமாக மாத்திரம் என்பதுடன் இது வேறு எந்த ஒரு அரசாங்க சேவைக்கும் தகைமையாகக் கொள்ளப்படமாட்டாது.
- தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்கள், கண்டி மாநாகர சபை ஆணையாளருடன் சேவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.
- நில அளவை உபகரணங்கள் சேவை வழங்குவோர் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

*குறிப்பு -* இந்த சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் கண்டி மாநகர சபையின் www.kandy.mc.gov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பம் பெறப்படும் இறுதித்திகதிக்கு அனைத்து அவசியமான தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்

என்பதுடன் சேவை பெறுதல் குறித்த இறுதித் தீர்மானம் கண்டி மாநகர சபையின் நகர ஆணையாளரினால் மேற்கொள்ளப்படும் விண்ணப்பம் கோரப்பட்ட பின்னரோ அல்லது விண்ணப்பம் கோரப்படுகின்ற காலத்திலோ இந்த நியமனம் வழங்குதலை தாமதப்படுத்துவதற்கு, மாற்றுவதற்கு, இந்த அறிவித்லை இரத்துச் செய்வதற்கு, இந்த அறிவித்தலைத் திருத்தியமைப்பதற்கு என பூரண அதிகாரம் கண்டி மாநகர சபையின் நகர ஆணையாளருக்கு உண்டு.

ஏ. எச். எம். இந்திகா குமாரி அபேசிங்க.
நகர ஆணையாளர்,
கண்டி மாநகர சபை.

2026, பெப்புருவரி 27.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**கண்டி மாநகர சபையின் காணித் திணைக்களத்திற்காக சேவை கொள்வனவு செய்தல் முறையின் அடிப்படையில் நில அளவயாளர் சேவையினைப் பெற்றுக் கொள்ளல்**

01. விண்ணப்பதாரர் வசிக்கின்ற உள்ளூராட்சி நிறுவனம் : ……………………………………………………………………

02. (அ) முதல் எழுத்துடன் பெயர் (தமிழில்) : ……………………………………………………………………

(ஆ) முழுப்பெயர்(தமிழில்) : ……………………………………………………………………

(இ) முழுப்பெயர்(ஆங்கில் கெப்பிட்டல் எழுத்தில்) : ……………………………………………………………………

03. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ……………………………………………………………………

04. பிறந்த திகதி : வருடம்:……………… மாதம் :……………… திகதி:………………

05. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் (2026.03.27) திகதிக்கு வயது:

: வருடங்கள்:…………மாதங்கள்:....................நாட்கள்:…………

06. பால் : ……………………………………………………………………

07. விவாக நிலை : ……………………………………………………………………

08. நிரந்தர முகவரி : ……………………………………………………………………

09. தொலைபேசி இல. : ……………………………………………………………………

10. நீங்கள் இலங்கை பிரசையா ? : ……………………………………………………………………

அவ்வாறாயின் பரம்பரை அடிப்படையிலா? பதிவு செய்தல் அடிப்படையிலா? என்ற விபரம்

……………………………………………………………………………………………………………………………

11. கல்வித் தகைமைகள்

11.(I) க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சை

ஆண்டு : ................................

சுட்டிலக்கம் : ................................

| இல. | பாடம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |
| 05. | | |
| 06. | | |
| 07. | | |
| 08. | | |
| 09. | | |
| 10. | | |
| | | |

11.(II) க.பொ.த (உயர் தரப்) பரீட்சை

ஆண்டு : ................................

சுட்டிலக்கம் : ................................

| இல. | பாடம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |

12. டிப்ளோமா குறித்த விபரம்

..........................................................................................................................................

..........................................................................................................................................

13. தொழில் தகைமைகள் மற்றும் சேவை அனுபவம்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

13. விண்ணப்பதாரரின்அத்தாட்சிப்படுத்தல்

என்னால் மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியானவையுதும் உண்மையானவையு என உறுதிப்படுத்துகின்றேன். மேலே குறிப்பிட்ட விபரங்கள் பொய்யானவை என்பதாக நான் சேவைக்கு தெரிவு செய்யப்பட முன்னதாக நிரூபணமானால் நான் நியமனம் பெறத் தகுதியில்லாதவராவதுடன், நியமனம் பெற்ற பின்னர் நிரூபணமானால் எந்த ஒரு இழப்பீடும் வழங்கப்படாத நிலையில் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் அறிவேன்.

திகதி ........................................

........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

03-203

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## தங்காலை நகர சபை

நகர சபைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 49 ஆம் பந்தியின் படி தங்காலை நகர சபையின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள தங்காலை நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் கீழே காட்டப்பட்டுள்ள வீதியின் ஆரம்பத்தில் இருந்து கதுருபொக்குன வீதி வரை உள்ள பகுதியில் வாகனப் போக்குவரத்து கிழமை நாட்களில் மு.ப 6.30 மணி தொடக்கம் மு.ப 8.00 மணி வரையையிலும் மற்றும் ந.ப 12.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரையிலுமான காலப் பகுதியில் வீதியில் ஒரு பகுதிக்கு மாத்திரம் இடம்பெறும் என்பது இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பதாக இருப்பின் அந்த அறிவித்தலில் இருந்து ஒரு மாத காலத்துக்கு உள்ளே செயற்படும் படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| *வீதியின் பெயர்* | *வீதியின் நீளம்* | *அகலம்* | *ஆரம்பிக்கும் இடம்* | *முடிக்கும் இடம்* | *கிராம அதிகாரப் பிரிவு* |
|---|---|---|---|---|---|
| ஸமுவெல் மாவத்தை | 280.m | 9.m | மஹவெல வீதி | கதுருபொக்குன வீதி | பள்ளிக்கூடாவ (நகர) |

ஜீ. சிந்தக கெலும்,
தலைவர் (பதில் வேலை),
தங்காலை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
தங்காலை
2026 பெப்புருவரி 20.

03-158

---

## தங்காலை நகர சபை

நகர சபைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 49 ஆம் பந்தியின் படி தங்காலை நகர சபையின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள தங்காலை நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் கீழே காட்டப்பட்டுள்ள வீதியின் ஆரம்பத்தில் இருந்து (நகர சபைக் காரியாலயத்துக்கு அருகில் இருந்து) தங்காலை நகர சபை காரியாலயம் பின் பகுதி வரை உள்ள பகுதியில் வாகனப் போக்குவரத்து கிழமை நாட்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரையான காலப் பகுதியில் வீதியில் ஒரு பகுதிக்கு மாத்திரம் இடம்பெறும் என்பதை இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பதாக இருப்பின் அந்த அறிவித்தலில் இருந்து ஒரு மாத காலத்துக்கு உள்ளே செயற்படும் படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| *வீதியின் பெயர்* | *வீதியின் நீளம்* | *அகலம்* | *ஆரம்பிக்கும் இடம்* | *முடிக்கும் இடம்* | *கிராம அதிகாரப் பிரிவு* |
|---|---|---|---|---|---|
| முஹீது மாவத்தை | 641.m | 7.3.m | பிரதான வீதிச் சந்தி | கடற்கரை விகாரைக்கு அண்மையில் உள்ள T- சந்தி | கொட்டுவேகொட |

ஜீ. சிந்தக கெலும்,
தலைவர் (பதில் வேலை),
தங்காலை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
தங்காலை
2026, பெப்புருவரி 20.

03-157

# நானாவித அறிவித்தல்கள்

**ஹிக்கடுவ நகர சபை**

ஆபத்தான மரங்களை அகற்றும் கட்டணத் திருத்தம் - 2026

2025.11.28 ஆந் தேதியிட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி இல. 2465 இன் பகுதி IV (அ) இல் வெளியிடப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்கான ஹிக்கடுவ நகர சபைக்கான வரிகள் மற்றும் உரிமங்களை விதிக்கும் வர்த்தமானி அறிவிப்பில் உள்ள ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கான விண்ணப்பக் கட்டணம், 2026.03.01 முதல் பின்வருமாறு திருத்தப்படும் என்பதை 25.02.2026 அன்று நடைபெற்ற சிறப்புப் பொதுக் கூட்டத்தின் தீர்மான இல. 1.3 இன் கீழ் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

வழக்கறிஞர் யசஸ்வின் கோடகந்தா,
தலைவர்,
ஹிக்கடுவ நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹிக்கடுவ.

ஆபத்தான மரங்களை அகற்றுதல்.

i. விண்ணப்பம் மற்றும் ஆய்வுக் கட்டணம் (ஒரு விண்ணப்பத்திற்கு) - ரூ. 1000.00
(குறிப்பு - ஒரு சொத்து/நிலத்திற்கு ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

03-151

---

**தங்காலை நகர சபை**

பறைவெல்ல கடற்கரைப் பூங்கா தொடர்பாக கட்டணங்கள் விதித்தல் - 2026

2026.12.26 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரத்தில் பிரசுரிப்பதற்கு முன் வைக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்காக பறைவெல்ல கடற்கரைப் பூங்கா அண்மித்து கட்டணம் நிர்ணயித்தலின் கீழ் வாகனம் நிறுத்தும் இடத்துக்கு உட்படுத்தப்படும் வாகனங்களுக்கு மேலதிகமாக, தங்காலை பறைவெல்ல கடற்கரைப் பூங்காவுக்கு வருகை தருபவர்கள் மூலம் தங்காலை கடற்கரை விகாரைக்கு அண்மையில் இருந்து கொட்டுக்கொடெல்ல விளையாட்டு மைதான எல்லை வரை நிறுத்தப்படும் வாகனங்களில் இருந்து கட்டணம் அறவீடு செய்வதற்கு 2025.11.20 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த கூட்டத்தின் தீர்மான இலக்கம் (த.ந.ச.2025.11.20 ஆந் திகதி மா.கூ-5/II-V) மூலம் அங்கீகரிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

தலைவர்,
தங்காலை நகர சபை.

03-156/1

---

**தங்காலை நகர சபை**

சேவைக் கட்டணம் விதித்தல் தங்காலை பொது விளையாட்டு அரங்கு- 2026

2025.12.26 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரத்தில் பிரசுரிப்பதற்கு முன் வைக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்காக சேவைக் கட்டணம் விதித்தலின் கீழ் அட்டவணை இலக்கம் 23 இன் கீழ் உள்ள

விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான கட்டணத்தை (ஒரு நாளைக்கு) பின்வரும் வகையில் திருத்தி அமைப்பதற்கு 2025.12.18 ஆந் திகதி மாதாந்த கூட்டத்தின் தீர்மான இலக்கம் (த.ந.ச.2025.11.20 ஆந் திகதி மா.கூ-5/III-I) மூலம் அங்கீகரிக்கப்பட்டு தீர்மானம் செய்யப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

| *தொ.இல.* | *பொது விளையாட்டு மைதானத்தைப் பெற்றுக் கொடுக்கும் விடயம்* | *அறவிடப்படும் கட்டண அளவு (ரூபா)* | *வைப்புக் கட்டணம் (ரூபா)* |
|---|---|---|---|
| 01 | விளையாட்டு கழகம்/சங்கங்கள் வேறு நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் விளையாட்டு போட்டிகளுக்காக | 30,000.00 | 5,000.00 |
| 02 | அனைத்துப் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக | 15,000.00 | 5,000.00 |
| 03 | கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி | 15,000.00 | 5,000.00 |
| 04 | ஆரம்பப் பாடசாலைகள் மூலம் நடாத்தப்படும் பெருநாள் கொண்டாட்டங்களுக்காக | 10,000.00 | 5,000.00 |
| 05 | அரசியல் கட்டங்கள்/கண்காட்சிகள்/விழாக்கள்/புத்தாண்டு கொண்டாட்டங்கள் (ஆரம்ப நெறி பாடசாலைகள் தவிர்ந்த) என்பவற்றுக்காக பொது விளையாட்டு அரங்கு கொடுக்கப்பட மாட்டாது. | - | - |

தலைவர்,
தங்காலை நகர சபை.

03-156/2

---

**தங்காலே நகர சபை**

சேவைக் கட்டணம் விதித்தல் - 2026

தங்காலே நகர மண்டபம் ஒதுக்குவதற்கான கட்டணம் (ஒரு நாளைக்கு)

2026.12.26 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரத்தில் பிரசுரிப்பதற்கு முன் வைக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்காக சேவைக் கட்டணம் விதித்தலின் கீழ் அட்டவணை இலக்கம் 18 இன் கீழ் உள்ள நகர மண்டபத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான கட்டணத்தை (ஒரு நாளைக்கு) இன் கீழ் கட்டணம் அறவிடப்படாமல் நகர சபையை ஒதுக்கிக் கொள்ளும் போது நிர்வாகச் செலவாக ரூ. 5000.00 பணத்தை அறவீடு செய்வதற்கு 2025.12.18 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த கூட்டத்தின் தீர்மான இலக்கம் (த.ந.ச. 2025.12.18 ஆந் திகதி மா.கூ-5/III-I) மூலம் அங்கீகரிக்கப்பட்டு தீர்மானம் செய்யப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

தலைவர்,
தங்காலே நகர சபை.

03-156/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.